සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## கத்தோலிக்க சமயம் - කතෝලික ධර්මය

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

பகுதி I

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

• **1 - 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. ஈசாக்கின் மகனான யாக்கோபுவின் சகோதன் யார் ?
   1) யோவான் 2) ஏசா 3) பவுல் 4) அந்திரேயா

2. திருமணம் என்பது ஓர் .............
   1) உடன்படிக்கை 2) சட்டம் 3) விருப்பம் 4) கட்டுப்பாடு

3. சிரியா மன்னனின் படைத்தலைவரான நாமானின் தொழுநோயை குணப்படுத்தியவர்.
   1) எலியா 2) ஆமோஸ் 3) நாத்தான் 4) எலிசா

4. ஆபிரகாமிற்கு வாக்களிக்கப்பட்ட நாடு எது ?
   1) ஆரோன் 2) கானான் 3)பெத்தேல் 4) ஊர்

5. செபதேயுவின் மகனான யாக்கோபுவின் சகோதரன்.
   1)பேதுரு 2)அந்திரே 3)யோவான் 4) தோமா

6. இயேசுவை யூதரிடம் காட்டிக் கொடுத்த யூதாசுக்குப் பதிலாக தெரிவு செய்யப்பட்ட திருத்தூதர் யார்?
   1) மத்தியா 2) பேதுரு 3) பிலிப்பு 4) தோமா

7. கடவுளோடும், மனிதரோடும் போராடி வெற்றி கொண்ட யாக்கோபு பெற்றுக்கொண்ட பெயராவது ?
   1)விசுவாசத்தின் தந்தை 2) இனத்தின் தந்தை
   3) இஸ்ராயேல் 4) யூதாவின் அரசன்

8. பொய்ச்சாட்சி கூறத் தூண்டுவது.
   1)மனம் 2) கெட்ட நண்பன் 3) ஆசை 4) சாத்தான்

9. நான் யாரிடமாவது அநீதியாக எதையாவது வாங்கியிருந்தால் ................ மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுதின்றேன் இடை வெளிக்குப் பொருத்தமான சொல்..
   1) இரண்டு 2) நான்கு 3) ஐந்து 4) பத்து

10. பெற்றோரையும், பெரியோரையும் மதிக்க வேண்டும் என எமக்கு கற்பிக்கும் கட்டளையாவது.
   1) ஐந்தாம் கட்டளை 2) மூன்றாம் கட்டளை
   3) ஆறாம் கட்டளை 4) நான்காம் கட்டளை

- **இலக்கம் 11 - 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை தெரிந்து அடைப்புக்குள் எழுதுக.**

| |
|---|
| ஈசாக்கின், குருத்துவம், பெத்தேல், உறுதிமொழி, விருத்த சேதனம் |

11. .................. என்றால் ஆண்டவரின் இல்லம் என்று பொருள்படும்

12. திருமுழுக்கின் போது குழந்தையை கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்ப்போம் என ஞானப்பெற்றோர்∴ பெற்றோர் குருவிற்கு ..................... வழங்க வேண்டும்.

13. கெராரில் இருந்த மேய்ப்பர்கள் .................. மேய்ப்பரோடு கிணறு தொடர்பாக வாதாடினர்.

14. கடவுள் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடனட்படிக்கையின் வெளி அடையாளமாவது .................. ஆகும்.

15. ................ இறை தந்தையிடமிருந்து கிடைக்கும் மேலான அழைப்பாகும்.

- **16 - 20பின்வருவன சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

16. இயேசு விண்னேற்றமடைய முன்பு திருத்தூதர்களுக்கு மறைத்தூதுப் பணியை பொறுப்பளித்தார். ( )
17. திருமணத் தம்பதியினர் வாழ்நாள் முழுவதும் ஒன்றாக வாழ்வது ஒருமை எனப்படும். ( )
18. சொத்துக்கள் அனைத்துக்கும் உரிமையாளர் இறைவனாவார். ( )
19. துறவற சபை குருக்களின் வார்த்தைப்பாடு இரண்டாகும். ( )
20. ஏசா தன் சகோதரன் யாக்கோபுவை ஏழு முறை வணங்கினான். ( )

$2 \times 20 = 40$ புள்ளி

## பகுதி II

♦ **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**

1. 1) உமது மறைமாவட்டத்தில் இவ்வருடம் எந்த ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது?
   2) அதன் மையப்பொருள் யாது?
   3) ஆதிப்பிதா யாக்கோபுவின் பெற்றோர்களின் பெயர் என்ன?
   4) எசேக்கியேல் என்பதன் பொருள் என்ன?
   5) திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்றுவோர் யார்?
   6) துறவற சபைகளின் குருக்களின் இரு பிரிவுகளும் எவை?
   7) இறைவன் ஆபிரகாமோடு ஏற்படுத்திய உடன்படிக்கையின் முக்கிய இரு பிரிவுகளும் என்ன?
   8) ஆதிப்பிதா யாக்கோபு கனவு கண்ட இரு இடங்களும் எவை?
   *9) கத்தோலிக்க அருட்பணியாளர்களின் இரு இடங்கள் எவை?*
   *10) திருப்பாவத்துவ சபை அங்கத்தவரின் இரு கடமைகளை எழுதுக?*

(*2*×10 = 20 புள்ளி)

2. 1) அருட்பணியாளர்களின் திருநாள் கொண்டாடப்படும் தினம் எது?
   2) குருத்துவத்தின் மூன்று நிலைகளையும் எழுதுக?
   3) அருட்பணியாளர்களின் மட்டில் எமக்குள்ள கடமைகள் ஐந்தை குறிப்பிடுக?

(*2+3+5* = 10 புள்ளி)

*3. 1) கிறிஸ்தவ திருமணத்தின் பண்புகள் இரண்டும் எவை?*
   *2) பிள்ளைகள் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள் மூன்று எழுதுக?*
   *3) உமது பெற்றோரின் நல்வாழ்விற்காக மன்றாட்டு ஒன்று எழுதுக?*

(*2+3+5* = 10 புள்ளி)

*4. 1) இயேசு அழைத்த முதல் சீடர்களில் இருவரின் பெயர்களைத் தருக?*
   *2) இயேசுவின் முதல் சீடர்களிடம் காணப்பட்ட பண்புகள் மூன்று எழுதுக?*
   *3) இயேசுவை இவ்வுலகில் பிறருக்கு அறிமுகப்படுத்த உம்மால் செய்யக்கூடிய பணிகள் 5 எழுதுக?*

(*2+3+5* = 10 புள்ளி)

5. 1) பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினரின் இரு பிரிவுகளும் எவை எனக் குறிப்பிடுக?
   2) பெரிய இறைவாக்கினர் மூவரைக் குறிப்பிடுக?
   3) திரு முழுக்கின் மூலம் இறைவாக்கினராக அருட்பொழிவு செய்யப்பட்டுள்ள உமக்குள்ள கடமைகள் 5 தருக

(*2+3+5* = 10 புள்ளி)

6. 1) அனனியா - சபீரா மீறிய கட்டளை என்ன?
   2) நாம் சொத்துக்களையும், உடமைகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய நேரிய வழிமுறைகள் 3 தருக?
   3) உண்மை நிறைந்த ஓர் சமூகத்தை கட்டியெழுப்ப உம்மால் செய்யக் கூடிய செயற்பாடுகள் 5 குறிப்பிடுக?

(*2+3+5* = 10 புள்ளி)

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.